ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வைபவம்

(ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வைகுண்டவாஸீ)

## திருவவதார க்ரமம்

இவ்வாசார்யன் இந்தக் கலியுகத்தில் 4370 சாலிவாஹன சகாப்தம் 1191, விபவ வருஷம் புரட்டாசி மாஸம் ச்ரவண நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் பொய்கை தனில் வந்துதித்த புனிதரான பொய்கையாழ்வார் அவதரித்தருளின காஞ்சீபுரத்திற்கு அருகில் 'கால் நிலம் தோய்ந்து விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகாவுது அம்பூந்தேனிளஞ்சோலை அப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே' என்னப்பட்டதாயும், ஸ்ரீ தீபப்ரகாசர் அர்ச்சாரூபம் கொண்டு எழுந்தருளியிருப்பதும் ஆன ஹிமவனம் எனப்படும் திருத்தண்கா என்கிற திவ்யக்ஷேத்திரத்தில் இந்த நம்முடைய ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தைப் பரவச் செய்வதற்காக எம்பெருமானார் நியமித்தருளின எழுபத்திநாலு ஸிம்மாஸனாதிபதிகளில் ஒருவராய், தூப்புல் (விச்வாமித்ர) குல திலகராய் விளங்கின ஸ்ரீஅநந்த ஸோமயாஜியாருடைய திருப்பௌத்திரரும், ஸ்ரீ புண்டரீகாக்ஷ ஸோமயாஜியாருடைய திருக்குமாரருமான ஸ்ரீ அநந்தஸூரியாருக்கும், கிடாம்பிக் குலபதி அப்புள்ளார் தம் ஸஹோதரியான தோதாத்ரி அம்மைக்கும் திருக்குமாரராகத் திருவவதரித்தருளினார். இந்த அவதார விசேஷத்தின் பெருமையை இவருடைய திருக்குமாரரும் சிஷ்யருமான தூப்புல் நயினாரும் 'அன்றிவ்வுலகினை ஆக்கி அரும்பொருள்நூல் விரித்து நின்று தண் நீள்புகழ் வேங்கடமாமலை மேவிப்பின்னும் வென்றிப்புகழ்த் திருவேங்கடநாதன் எனும் குருவாய் நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே' என்று அருளிச்செய்தார். இவருடைய மாதா பிதாக்கள் இருவரும் தாங்கள் கண்ட ஸ்வப்நத்தின்படி திருவேங்கடமுடையானுடைய ஒரு புரட்டாசித் திருவோண உத்ஸவத்தை ஸேவிப்பதற்காக அங்கேயே தங்கியிருக்கும்பொழுது ஓரிரவில் திருவேங்கடமுடையான் ஒரு சிறு குமாரன் போல் தோன்றி தம்முடைய ஸ்வர்ண கண்டையைத் தன்னிடம் கொடுத்ததாகவும், அதைத் தான் கையில் வாங்கி வைத்துக்கொண்டதாயும், அந்தக் குழந்தை அதை விழுங்கும்படிச் சொன்னதாகவும் கனவு கண்டு, தன் பர்த்தாவை எழுப்பி, இந்த வ்ருத்தாந்தத்தைத் தெரிவிக்க, அவரும் தாமும் அப்படியே கனவு கண்டதாகத் தெரிவித்து, இது ஓர் அனுக்ரஹவிசேஷம் என்று போர உகந்திருந்தார். மறுநாள் காலையில் ஸந்நிதித் திருக்காப்பு நீக்கினபொழுது

ஸ்வர்ண கண்டையைக் காணாமல் பரிஜனங்கள் திகைத்து நிற்க, அர்ச்சக பரிசாரகர்களின் மேல் ஸந்தேஹம் உண்டாகி, கோவில் அதிகாரிகள் அவர்களை ஹிம்ஸித்து நிர்பந்திக்க, திருவேங்கடமுடையான் தாமே அந்தக் கண்டையை அந்தர்தானம் செய்திருப்பதாயும், அதைப்பற்றி மேலே விசாரிக்கவேண்டியதில்லை என்று தமக்கு எம்பெருமான் ஸ்வப்நத்தில் நியமித்ததாகவும் திருமலை ஜீயர் தெரிவிக்க, எல்லோரும் விஸ்மிதரானார்கள். அநந்தஸூரிகளும் திருவேங்கடமுடையானுடைய நியமனம் பெற்றுக்கொண்டு தம் தேவிகளுடன் காஞ்சீபுரம் சென்றார். தோதாத்ரியம்மையும் அதுமுதல் கர்ப்பம் தரித்து, பன்னிரண்டு வருஷம் கழித்துக் கீழ் நிரூபித்த சுபதினத்தில் கௌஸல்யாதிகளைப் போலே பாக்யம் பெற்றவளாய் ஸ்வாமியைத் தன் குழந்தையென பாவிக்கும்படியான விசேஷாதிசயத்தைப் பெற்றாள். சக்ரவர்த்திக்குத் திருக்குமாரராகத் தாம் அவதரிக்க ஸங்கல்பித்துக் கொண்டபொழுது புத்ரகாமேஷ்டி யாகத்தில் திவ்யபாயஸம் என்கிற வ்யாஜத்தையிட்டு அவதரித்தாப்போலே, இப்பொழுது இந்த ஆசார்யரூபமான அவதாரத்திற்குத் திருக்கண்டையை ஒரு வ்யாஜமாத்திரமாக அங்கீகரித்தபடியைக் கணிசித்து, “வேங்கடேசாவதாரோயம்” என்று விகல்பித்து அருளிச்செய்தார் ஸ்ரீ குமார வேதாந்தாசாரியரும். ஸ்ரீ யதிராஜ ஸப்ததியில் 'சிரந்தந' என்னும் ச்லோகத்தில் அபிப்ரேதமான கொங்குப்பிராட்டியின் வ்ருத்தாந்தத்தை அனுஸந்தித்து 'யதீந்த்ராம்சோ' என்று மற்றொரு விதமாக விகல்பித்து அருளிச்செய்யப்பட்டு இருக்கிறது. இப்படித் திருவேங்கடமுடையானுடைய ஸாக்ஷாத் அவதாரமென்றும், அவருடைய திருக்கண்டையின் அவதாரமென்றும், ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதாரமென்றும் விகல்பித்து நிரூபித்திருந்தபோதிலும் பிள்ளையந்தாதியில் ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்பட்டிருப்பதினாலும், அப்யர்ஹித ந்யாயத்தாலும், ஸ்வாமியினுடைய அவதார சரித்ர விசேஷங்களினாலும் ஸ்வாமி வேங்கடேசனுடைய ஸாக்ஷாத் அவதாரம் என்பது ஸ்பஷ்டமாக ஏற்படும். சில ஸாத்ருச்யாதிகளை முன்னிட்டு கண்டாம்சாதி விகல்பங்கள் என்றறிய வேண்டும். திவ்ய கண்டை என்கிற வ்யாஜத்தையிட்டுத் தாம் அவதரித்தருளினபடியை ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் நிரூபித்தருளினாப்போலே, தாம் ஸாக்ஷாத் பகவதவதாரம் என்பதையும் அந்த க்ரந்தத்திலேயே அருளிச்செய்திருக்கிறார். எம்பெருமானாரை விச்வாமித்ரராகவும், தம்மை சக்ரவர்த்தித் திருமகனாகவும் நிரூபித்தருளியிருப்பதினால் ஸ்வாமி ஸாக்ஷாத் அவதாரம் என்பது ஸூசிப்பிக்கப்பட்டதாகிறது. பகவானுடைய திருமணியாழ்வார் எப்படித் தம்முடைய சப்தத்தினால் பகவந்நிவேதிதமாகும் வஸ்துக்களை அஸுரர்கள் வந்து ஆக்ரமிக்காமல் அவர்களைத் தடுத்துப் பகவானுக்கே உபயோகப்படும்படிச் செய்கிறாரோ, அதைப்போலவே ஸ்வாமியும் பகவானுடைய விபூதியாகிற இந்தச் சேதனாசேதன வர்க்கங்களை அபஹாரம் செய்யும் ஆஸுர ப்ரக்ருதிகளைத் தம்முடைய நாவினால் வென்று பகவானுக்கே சேஷபூதங்கள் என்று நிலைநிறுத்தினபடியினால் கண்டாம்சமென்று உத்ப்ரேக்ஷித்தபடி. இப்படியன்றிக்கே இவரைக் கேவலம் கண்டாம்சம் என்னில், சக்ரவர்த்தித் திருமகன் கேவலம் பாயஸாவதாரம் என்ன ப்ரஸங்கிக்கும்.

## அவதார வைலக்ஷண்யாதிகள்

திருவவதார க்ஷணம் துடங்கி ஸ்ரீ க்ருஷ்ணனைப் போலத் தம் அவதார விசேஷத்தின் பெருமையை அதிபால்யம் துடங்கிப் பலபடிகளாலும் வெளியிட்டருளினார். இவர் படிகளை ஆராய்ந்த பெரியோர்கள் இவர் ஸ்ரீக்ருஷ்ணனைப் போன்றவர் என்றும், வரப்ரஸாதத்தால் அடையப்பட்ட தேவதாபாரமார்த்ய ஜ்ஞானமுடைய பராசரமஹர்ஷி போன்றவர் என்றும், வால்மீகி மஹர்ஷிக்கு ஜ்ஞானப்ரதானம் செய்த ப்ரஹ்மாவிற்கும் வேதத்தை உபதேசித்தருளின ஸ்ரீ ஹயக்ரீவனுடைய ப்ரஸாதத்தினால் ஸர்வஜ்ஞத்வம் பெற்றவர் என்றும், விரக்தாக்ரேஸரராய் எழுந்தருளியிருந்த சுகமஹர்ஷியைப் போன்றவர் என்றும், வ்யாஸ மஹர்ஷியைப் போல சாரீரக சாஸ்திர விஷயமான ந்யாயத்தை வகுத்தவர் என்றும், ஆழ்வாரைப் போல மயர்வற மதிநலம் அருளப்பட்டவர் என்றும், கலியனைப் போல அர்ச்சாவதாரத்தில் போர மண்டியிருப்பவர் என்றும், ச்ரிய:பதியை அனுபவிக்கிற விஷயத்தில் 'அகலகில்லேன் இறையும்' என்னும் பெரியபிராட்டியாரைப் போன்றவர் என்றும், பகவான் தானும் மேல் விழுந்து தம் விஷயமாகக் கவி பாட நியமிக்கும்படியான ஏற்றம் பெற்றவர் என்றும், தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்ன ஆழ்வாரைப் போல பகவதனுக்ரஹத்தையே தமக்குப் புருஷார்த்தமாக உடையவர் என்றும், ஸர்வவித கைங்கர்யங்களையும் கூட இருந்து செய்த இளையபெருமாளைப் போல திவ்யதம்பதிகளின் விச்லேஷத்தைப் பொறுக்காமல் அவர்களுடைய ஸம்ச்லேஷமே நித்யஸுகம் என்பதை நிலைநிறுத்தினவர் என்றும், சேஷியுகந்த கைங்கர்யமே உத்தேச்யம் என்றிருந்த பரதாழ்வான் போன்றவர் என்றும், பாகவத கைங்கர்யமே பரமோத்தேச்யம் என்றிருந்த சத்ருக்கனாழ்வான் போன்றவர் என்றும், பரம த்வேஷிகளுக்கும் ஹிதோபதேசம் செய்ய முன்வந்த ப்ரஹ்லாதாழ்வான் போன்றவர் என்றும் அனுஸந்தித்துப் போந்தார்கள். இப்படி இவருடைய படிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவரையே கதிர்பொறுக்கிச் சொல்லும்படியான ஸர்வ குணநிதியாக வீறு பெற்றிருந்தவர் இவர் ஒருவரே ஆகிறார்.

## அம்மாள் அனுக்ரஹம்

இப்படித் தமக்குத் திருவேங்கடமுடையான் அனுக்ரஹத்தினால் பிறந்த குழந்தைக்கு ஸ்ரீ அநந்தஸூரிகளும் வேங்கடநாதன் என்ற திருநாமம் சாற்றி மற்றைய அன்னப்ராசனம், அப்தபூர்த்தி, சௌளம், அக்ஷராப்யாஸம், முதலியவைகளை அந்தந்தக் காலங்களில் நடத்திவைத்தார். அப்தபூர்த்தியன்று ஸ்ரீதேவப்பெருமாள் ஸந்நிதிக்கு அழைத்துக்கொண்டு போனபொழுது அர்ச்சக முகேந 'நம் இராமாநுஜ தர்சனத்தை வளர்த்து வரக்கடவீர்' என்று அனுக்ரஹம் செய்த ப்ரகாரத்தை ஸ்வாமி தாமே 'அன்றே அடைக்கலம் கொண்ட நம் அத்திகிரித்திருமால்' என்று ஸூசிப்பித்தருளினார். ஸ்வாமியும் கால க்ரமத்தில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக 'என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற

வயிறுடையாள்' என்று எல்லோரும் அனுஸந்திக்கும்படியான வைலக்ஷண்யத்துடன் வளர்ந்து கொண்டு வரும் நாளில், இவருடைய மாதுலரான கிடாம்பி அப்புள்ளார் ஒருநாள் இவரைப் பார்த்துவிட்டுப் போகவேண்டும் என்று இவருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளி, ஸ்வாமியை உபலாளனம் செய்துவிட்டுத் தாம் அம்மாளுடைய காலக்ஷேபத்திற்குப் போகவேண்டுமென்று த்வரையாகப் புறப்படும்பொழுது ஸ்வாமியும் தாமும் கூட வருவதாக நிர்ப்பந்திக்க, கூட அழைத்துச்சென்றார். இத்தால் அப்புள்ளாருக்குக் காலக்ஷேப கூடத்திற்குப் போவதற்குக் கொஞ்சம் விளம்பம் ஏற்பட்டது. இதற்குள் யதாக்ரமம் காலக்ஷேபம் ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டிருந்தது. அப்புள்ளாரும் தம்முடைய மருமகனுடன் அம்மாளை ஸேவித்துவிட்டுத் தம்முடைய வழக்கமான இடத்தில் போய் உட்கார்ந்தார். ஸ்வாமியினுடைய திவ்யதேஜஸ்ஸில் ஈடுபட்டு அங்கிருந்த ச்ருதப்ரகாசிகாசார்யர், வடக்குத்திருவீதிப்பிள்ளை முதலிய முதலிகள் காலக்ஷேபத்தில் விட்ட இடம் தெரியாமல் திகைத்து நிற்கும்பொழுது, ஸ்வாமி முன் உபந்யஸிக்கப்பட்ட விஷயத்தை ஸங்க்ரஹித்து, விட்ட இடத்தை எடுத்துக்காட்ட, அம்மாளும் இவர் ஓர் அவதார விசேஷம் என்பதை அறிந்து இவர் விஷயத்தில் தாமும் ஏதாவது ஒரு கிஞ்சித்காரம் செய்து பெருமை பெற வேண்டுமெனத் தீர்மானித்து, ஸ்வாமியை வாரி எடுத்து மார்போடணைத்து உச்சி முகந்து அனுக்ரஹித்தருளினார். அப்புள்ளார் முதலானோரும் இந்த அனுக்ரஹம் ஸார்த்தமாக வேண்டும் என்று ஆசி கூறினார்கள். அம்மாளும் இப்படிப்பட்ட வ்யக்திக்குத் தாம் நேரில் ஆசார்யகம் செய்யத் தம்முடைய வார்த்தகம் ப்ரதிபந்தகமாய் நிற்பதைக் கண்டு தம்முடைய சிஷ்யரான அப்புள்ளார் கையில் ஸ்வாமியை ஒப்புவித்து இவருடைய வித்யாப்யாஸம் உம்முடைய பொறுப்பாயிருக்கவேண்டுமென்பது நம்முடைய நியமனம் என்று அருளிச்செய்தார்.

## உபநயன வித்யாப்யாஸாதிகள்

அப்புள்ளாரும் தம்முடைய ஆசார்ய நியமனத்தைச் சிரஸாவஹித்து, ஸ்வாமிக்கு யுக்தமான வயது வந்தவாறே உபநயனம் செய்வித்து ஸகல சாஸ்திரங்களையும் உபதேசம் செய்தருளினார். ஸ்ரீ க்ருஷ்ணன் சாந்தீபினியின் இடத்தில் தினம் ஒரு கலையாகக் கற்றதோபாதி, எம்பெருமானார் பெரியநம்பி முதலியவர்களிடத்தில் வேதாந்த காலக்ஷேபம் செய்தருளினதோபாதி, ஸ்வாமியும் காவலரெங்கள் கிடாம்பிக்குலபதி அப்புளார் தம் தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து அவர் தம்மருளால் நாவலரும் தென்வடமொழி நற்பொருள் பெற்று இருபது வயதிற்குள் ஸர்வ கலைகளிலும் பாரங்கதராய் விளங்கி நின்றார். ஸ்வாமியும் தம்முடைய ப்ரஹ்மச்சர்ய வ்ரதத்தை ஸமாபனம் செய்து, தம்முடைய மாதா பிதாக்களின் நியமனப்படி தமக்கு எல்லா விதத்திலும் ஸத்ருசையான திருமங்கையார் என்னும் ஒரு கன்னிகையைப் பாணிக்ரஹணம் செய்துகொண்டு க்ருஹஸ்த தர்மத்தை யதா சாஸ்திரம் நடத்திக்கொண்டு வந்தார். அப்புள்ளாரும் ஸ்வாமியினுடைய அதிஸூக்ஷ்மமான மேதாவிசேஷத்தையும், இவர், மேல் செய்யவேண்டிய அவதார ப்ரயோஜன

வ்யாபாரங்களையும் கணிசித்து, ஸர்வ வேதஸ்வரூபன் என்று ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீ வைநதேயனுடைய மந்திரத்தை இவருக்கு உபதேசித்தருளினார்.

## வைநதேயனை ப்ரத்யக்ஷீகரித்தல்

இப்படி எழுந்தருளியிருக்கும் காலத்தில் அப்புள்ளார், ஸ்வாமியிடம் தம்முடைய ஸுதர்சந பாஞ்சஜந்யங்களைக் கொடுத்து, தம் திருவடிகளை ஸ்வாமியின் திருமுடியில் வைத்து அனுக்ரஹித்து, தமக்கு அஸாதாரணமாய்க் கிடைத்த யதிவரனார் மடைப்பள்ளி வந்த மணத்தை உபதேசித்தருளித் தம்முடைய ஆசார்யன் திருவடிகளையடைந்தார். ஸ்வாமியும் அவருடைய திருக்குமாரரைக் கொண்டு சரம கைங்கர்யத்தை யதா க்ரமம் நடத்திவைத்தார். பிறகு தம் அவதார கார்யத்தைச் செய்ய இனி விளம்பிக்கக் கூடாது என்று திருவுள்ளம் பற்றி, அதற்காகத் தம் ஆசார்யனால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீ வைநதேய மந்திரத்தை ஆவ்ருத்தி செய்து ஸித்தி பெறவேண்டும் என்கிற எண்ணத்துடன், ஒவ்வொன்றே ஸித்தி ஹேதுவான மஹாநதி, புண்யகிரி, திவ்யதேசம் (பகவத்க்ஷேத்ரம்) ஆகிய இவை மூன்றும் ஓரிடத்தில் சேர்ந்திருக்கிறதும், பெரியதிருவடி நயினாரால் ஏற்கனவே உகக்கப்பட்டதும், வையமேழுமுண்டு ஆலிலை வைகிய மாயவன் அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வநாயகன் ஸேவை ஸாதிக்கும் இடமான திருவஹீந்திரபுரத்தை அடைந்து, அங்கே ஔஷதாத்ரியில், அழகியசிங்கர் ஸந்நிதி முன்பே, ஸோமஸவனம் போன்ற ஓர் அச்வத்த வ்ருக்ஷத்தின் கீழே எழுந்தருளியிருந்து, ஸ்ரீ கருட மந்திரத்தை ஆவ்ருத்தி செய்ய உபக்ரமித்த உடனே, முன் ஸ்ரீராமாவதாரத்தில் நாகபாச விமோசனார்த்தம் சக்ரவர்த்தித்திருமகன் நினைத்தபொழுது எழுந்தருளினாப்போலே, இப்பொழுதும் ஸ்ரீ வைநதேயன் உடனே ப்ரத்யக்ஷமாகி, இந்த ஸம்ப்ரதாயம் இவர் மூலமாகத் தழைக்கவேண்டும் என்பதை அறிந்து, பன்னுகலை நால் வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாயருளிய பரமனாகிய ஸ்ரீ ஹயக்ரீவனுடைய யோகாஸிகையில் மூர்த்தி ஒன்றைக் கொடுத்து, அவருடைய மந்திரத்தையும் உபதேசித்து, இவர் மூலமாய்த் தாமும் பெருமை பெற எண்ணித் தம் விஷயமாய் ஒரு ஸ்தோத்திரம் செய்ய வேண்டும் என்று நியமித்துவிட்டு அந்தர்தானம் அடைந்தார்.

## ஹயக்ரீவனை ப்ரத்யக்ஷீகரித்தல்

இப்படிப் பெரியதிருவடி நயினாரால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தை அங்கேயே ஆவ்ருத்தி செய்ய, ஸர்வவித்யாமூர்த்தியான ஸ்ரீ ஹயக்ரீவனும் ப்ரத்யக்ஷமாகித் தம்முடைய திவ்ய லாலாம்ருதத்தைப் பானம் பண்ணும்படி நியமிக்க, ஸ்வாமியும் அப்படியே செய்தருள, ஸ்ரீ ஹயக்ரீவனுடைய ப்ரஸாதத்தாலே புகரூட்டின மாணிக்கம் போலே தேஜிஷ்டராய் வசம்வத ஸகலகலாகலாபராய் நின்றார். ஸ்ரீராமாவதாரத்தில் விச்வாமித்ரரால் உபதேசிக்கப்பட்ட அஸ்திர மந்திராபிமானி தேவதைகள் நேரில் வந்து நின்று தங்களை நியமித்தருளும்படி ப்ரார்த்திக்க, ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் தாம் வேண்டும்போது வரும்படி நியமித்தாப்போலே

ஸ்வாமியும் வேதாந்தவித்யயை மாத்திரம் தம்முடன் கூட இருக்கும்படிக்கும், மற்ற வித்யைகளைத் தாம் நினைத்தருளும்பொழுது வரும்படிக்கும் நியமித்தருளினார். இப்படி ஸர்வவித்யைகளும் இவரிட்ட வழக்காம்படி இருந்த விசேஷத்தைக் கடாக்ஷித்தவாறே பின்பொரு ஸமயத்தில் ஸ்ரீரங்கநாச்சியாரும் இவருக்கு 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' என்கிற பிருதைச் சாற்றியருளினது.



**சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு**

**தொடரும். . .**